வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 01.04.2026 – புதன்கிழமை                    நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் இரண்டு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல், 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்துள்ளது.

புதிய வருமான வரி சட்டம், மற்றும் இதர நிதி சீர்திருத்தங்கள் இன்று முதல், நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளன.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அஸ்ஸாம் மாநில சட்டமன்ற தேர்தலுக்கான மத்திய பார்வையாளர்களின் செயல்பாடுகள் குறித்து, தேர்தல் ஆணையம் மறு ஆய்வுக்கூட்டம் நடத்தியுள்ளது.

*மோடி அஸ்ஸாம் (18 )*

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் இரண்டு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கோகாமுக் பகுதியில் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில், ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் நலன்களுக்கே, பிஜேபி உயர் முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார். உள்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்விக்கு முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். தேயிலைக்குப் புகழ்பெற்ற மாநிலமான அஸ்ஸாமில் விரைவிலேயே, செமி-கண்டக்டர் உற்பத்தி ஆலை வரவிருப்பதால், இனி கணிப்பொறிச் சில்லுகளுக்கு பெயர் பெற்ற மாநிலமாகவும் அஸ்ஸாம் மேம்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அஸ்ஸாமின் பழங்குடி கலாச்சாரத்தை பாதுகாக்கும் வகையில் சமச்சீர் சிவில் சட்டத்தை

அமல்படுத்த பிஜேபி பாடுபடும் என்றும் அவர் உறுதியளித்தார். சுயசார்புடன் கூடிய மாநிலமாக அஸ்ஸாமை மேம்படுத்துவதே பாரதீய ஜனதா கட்சியின் தொலைநோக்குப் பார்வை என்று, பின்னர், பிஸ்வநாத் பகுதியில் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறினார். முன்னதாக, பிரதமர் இன்று காலை திப்ரூகர் பகுதியில், தேயிலைத் தோட்டம் ஒன்றுக்கு நேரில் சென்று, பெண் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார்.

*ஜிஎஸ்டி வசூல் (08)*

கடந்த மார்ச் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல், 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்துள்ளது. அதற்கு முந்தைய மாத வசூலுடன் ஒப்பிடுகையில், இது, 8.8 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல், 1 லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. 2025-26ஆம் நிதியாண்டில் மொத்த ஜிஎஸ்டி வசூல், 22 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து இருப்பதாகவும், முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இது, 8.3 சதவிகிதம் அதிகம் என்றும், மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

*வருமான வரி (14)*

புதிய நிதியாண்டின் தொடக்கமான இன்று முதல், புதிய, 2025-ஆம் ஆண்டு வருமான வரி சட்டம், நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளது. 60 ஆண்டுகளுக்கு மேலாக அமலாகி வந்த பழைய வருமான வரி சட்டத்திற்கு மாற்றாக புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய வருமான வரிச்சட்டத்தில், காலத்திற்கு ஒவ்வாத பழைய விதிமுறைகள் நீக்கப்பட்டு, சிக்கலான பல விதிமுறைகள் சீரமைக்கப்பட்டுள்ளதால், வரி செலுத்துவோரிடையே இணக்கச் சூழல் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரிசர்வ் வங்கி அறிவுறுத்தலின்படி இன்று முதல் அனைத்து டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளுக்கும் இரண்டு அடுக்கு அங்கீகார முறை கட்டாயமாக்கப் பட்டுள்ளது. புதிய நிதியாண்டிற்கான வருடாந்திர, Fast-Tag கட்டண விகிதங்களும் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன. புதிய PAN அட்டை பெறவும், PAN விவரங்களைப் புதுப்பித்துக்

கொள்ளவும், திருத்தப்பட்ட விதிமுறைகள் இன்று முதல் அமலுக்கு வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

*எல்.பி.ஜி விலை (07 )*

மேற்காசிய நிலவரங்களுக்கு இடையே, இந்தியாவின் பெரு நகரங்களில், வர்த்தக எல்பிஜி விலை, சிலிண்டருக்கு 195 ரூபாய் – 50 பைசா உயர்த்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, 19 கிலோ வர்த்தக எல்பிஜி சிலிண்டர் விலை, சென்னையில் 2 ஆயிரத்து 246 ரூபாய் – 50 பைசாவாக உயரும் என தகவல் வெளியாகியுள்ளது. இது அல்லாது, விமான எரிபொருள் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி சிலிண்டர் விலையில் மாற்றமில்லை.

*பெட்ரோல் விளக்கம் -1(06)*

இதற்கிடையே வர்த்தக எல்பிஜி விலை உயர்வுக்கான காரணங்கள் குறித்து மத்திய அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. ஓட்டல்கள் மற்றும் தொழிலகங்களின் பயன்பாட்டிற்கான வர்த்தக எல்பிஜி விலை, சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப, பொதுவாக மாதாந்திர அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதாக, மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சகம் இந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்.....

*பெட்ரோல் விளக்கம் -2(19)*

சவுதி அரேபியாவிலிருந்து எல்பிஜி வாங்கும் நிலை கடந்த மாதம், டன்னுக்கு 542 டாலராக இருந்த நிலையில், நடப்பு ஏப்ரல் மாதத்திற்கான ஒப்பந்த விலை, டன்னுக்கு 780 டாலராக அதிகரித்து இருப்பதே, வர்த்த எல்பிஜி சிலிண்டர் விலை உயர்வுக்கு காரணம் என்றும் நாட்டின் மொத்த எல்பிஜி நுகர்வில், வர்த்தக எல்பிஜி நுகர்வின் அளவு, 10 சதவிகிதத்தை விட குறைவு தான் என்றும், பெட்ரோலியத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி விலை மாற்றப்படாத நிலையில், எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டருக்கு 380 ரூபாய் நஷ்டமடைந்து வருவதாகவும், இழப்பின் மொத்த அளவு, வரும் மே மாத இறுதிக்குள் 40 ஆயிரத்து 484 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது. கடந்த ஆண்டு பொதுத்துறை

எண்ணெய் நிறுவனங்களின் 30 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை, அரசே ஏற்றுக் கொண்டதாகவும், இப்போதும் கூட, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் தான், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி விலை குறைவு என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேற்காசிய நிலவரங்களால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மைக்கு இடையிலும், இந்தியாவில் ப்ரீமியம் அல்லாத வழக்கமான பெட்ரோல்- டீசல் விலை உயர்த்தப்படவில்லை என்பதையும், அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

*பார்வையாளர் ஆய்வு - 1(11)*

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அஸ்ஸாம் மாநில சட்டமன்ற தேர்தலுக்கான மத்திய பார்வையாளர்களின் செயல்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் இன்று புதுடெல்லியில் மறு ஆய்வுக்கூட்டம் நடத்தினார். தலைமை தேர்தல் ஆணையர் தலைமையிலான மறு ஆய்வுக் கூட்டத்தில், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் எஸ்.எஸ்.சந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோரும் கலந்து கொண்டனர். 5 மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான பொதுப் பார்வையாளர்கள், போலீஸ் பார்வையாளர்கள் மற்றும் செலவினப் பார்வையாளர்களும், தமிழ்நாடு, புதுச்சேரி, மற்றும் அஸ்ஸாம் மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளும், காணொளிக் காட்சி மூலம் கூட்டத்தில் பங்கேற்றனர். இது குறித்து கூடுதல் தகவல்கள்….

*பார்வையாளர் ஆய்வு – 2(14)*

சட்டமன்றத் தேர்தல்கள், திருவிழாக் கொண்டாட்டத்துடன், சுதந்திரமான மற்றும் நியாயமான விதத்தில் எவ்வித அச்சுறுத்தல், தூண்டுதல் மற்றும் வன்முறையும் இன்றி நடைபெறுவதை பார்வையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என மறு ஆய்வுக் கூட்டத்தில் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியது. தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளை கடுத்தமாக அமல்படுத்தவும், விதிமுறை மீறல்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டது. வாக்குப்பதிவு நாளன்று, வாக்குப்பதிவு சதவிகிதம் பற்றிய தகவல்களை, 2 மணி நேரத்திற்கு ஒரு முறை, ஈசி-நெட்

செயலி மூலம் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிப்பது குறித்து வாக்குச் சாவடி அதிகாரிகளுக்கு முறையாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும், தேர்தல் ஆணையம், மத்திய பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தியது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அஸ்ஸாமில் தேர்தல் ஆணையம் மொத்தம் 282 மத்திய பார்வையாளர்களை நியமித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

*ட்ரோன் – புதுச்சேரி (10)*

புதுச்சேரியில் அனைத்து 30 தொகுதிகளிலும், ட்ரோன் மூலம் தேர்தல் கால கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் நிலையில், ட்ரோன் மூலமான சோதனையின் முதல் நாளிலேயே, மண்ணாடிப்பட்டு மற்றும் மங்கலம் தொகுதியில் வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்த 5 பேர் கைது செய்யப்பட்டு, மோட்டார் சைக்கிள் மற்றும் 66 ஆயிரத்து 300 ரூபாய் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டது. ட்ரோன் கேமராவில் பதிவான காட்சிகள் குறித்த தகவல் அடிப்படையில், சிறப்பு நிர்வாக நடுவர், சம்பவ இடங்களுக்கு விரைந்து சென்று இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டார். கைது செய்யப்பட்ட நபர்களும், பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் மற்றும் ரொக்கப் பணமும், சட்டப்பூர்வ மேல் நடவடிக்கைக்காக, காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. புதுச்சேரியில் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளின் கீழ் தீவிரக் கண்காணிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும், நெறிமுறை மீறல்கள் குறித்து சி-விஜில் மொபைல் செயலி அல்லது 1-9-5-0 என்ற இலவச தொலைபேசி எண் மூலம் பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்றும், தலைமை தேர்தல் அதிகாரி திரு.ஜவஹர் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால் - (10)*

காரைக்காலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி இன்று மாற்றுத்திறனாளிகள் 3 சக்கர வாகனப் பேரணி நடத்தி இருப்பதை, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திருமதி இஷிதா

ராட்டி பாராட்டியுள்ளார். காரைக்கால், தந்தை பெரியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் தொடங்கிய இந்த விழிப்புணர்வு பேரணி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்த போது, ஆட்சியர் பேரணியை வரவேற்றுப் பேசுகையில், மாற்றுத்திறனாளிகளின் சமூக பொறுப்புணர்வு பாராட்டத்தக்கது என்று கூறினார். தேர்தல் ஆணையத்தின் சீர்திருத்த ஒருங்கிணைப்பாளர் திரு. தாமோதரன் தலைமையிலான குழுவினர் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

*விஜய் (05 )*

புதுச்சேரியில் 23 இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் திரு. விஜய் அனுமதி கோரி இருந்த நிலையில் 4 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து திரு. விஜய் வீட்டிலிருந்தே பிரச்சாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

*ஜிப்மர் (04)*

புனித வெள்ளி தினமான வரும் 3ஆம் தேதி பொது விடுமுறை காரணமாக, புதுச்சேரி ஜிப்மரில் அன்றைய தினம் புறநோயாளிகள் பிரிவு இயங்காது என ஜிப்மர் நிர்வாகம் அறிவித்துள்ளது. ஆயினும் அவசர பிரிவு சேவைகள் வழக்கம் போல் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*வானிலை (10)*

இன்றும் நாளையும், தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளைப் பொருத்தவரை, வரும் 4ஆம் தேதி லேசான மழையும், வரும் 5, 6, 7 ஆகிய தேதிகளில், லேசானது முதல் மிதமான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் உதக மண்டலத்தில் 10.2 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.

*செயலர் (06)*

1992ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த, மூத்த ஐஏஎஸ் அதிகாரி திரு.சஞ்சல் குமார், மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை செயலராக இன்று பொறுப்பேற்றுள்ளார். திரு. சஞ்சய் ஜாஜூவிற்குப் பதிலாக அவர் இப்பதவிக்கு வந்துள்ளார். பீகார் மாநிலத்தைச் சேர்ந்த திரு. சஞ்சல் குமார் இதுவரை, வடகிழக்குப் பிராந்தியத்திற்கான வளர்ச்சித் துறை செயலராக பதவி வகித்து வந்தார்.

*ஆந்திர மசோதா - (07)*

ஆந்திர பிரதேசத்தின் ஒரே தலைநகரமாக அமராவதிக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து அளிக்கும் வகையில், ஆந்திர பிரதேச மறு சீரமைப்பு சட்டத்தை திருத்துவதற்கான மசோதா, மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு சட்டம் கொண்டு வர வலியுறுத்தி, ஆந்திர சட்டமன்றத்தில் கடந்த மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய், இன்று மக்களவையில் மசோதா தொடர்பான விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் இரண்டு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல், 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்துள்ளது.

புதிய வருமான வரி சட்டம், மற்றும் இதர நிதி சீர்திருத்தங்கள் இன்று முதல், நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளன.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அஸ்ஸாம் மாநில சட்டமன்ற தேர்தலுக்கான மத்திய பார்வையாளர்களின் செயல்பாடுகள் குறித்து, தேர்தல் ஆணையம் மறு ஆய்வுக்கூட்டம் நடத்தியுள்ளது.

-------------------------------------

*சிவகுமார சுவாமி - (17)*

கர்நாடக மாநிலம், சித்த கங்கா மடாதீசர் காலஞ்சென்ற சிவகுமார மகா சுவாமிகளின் 119ஆவது பிறந்த நாளான இன்று குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் அன்னாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளனர். 111 ஆண்டுகள் வரை வாழ்ந்து பகவான் பசவேஸ்வரரின் போதனைகளை பரப்பியவா சிவகுமார மகா சுவாமிகள் என்றும், ஏழைகளுக்கு இலவச உணவு மற்றும் கல்வி அளிப்பதில் முன்மாதிரியாக திகழ்ந்தவர் அவர் என்றும் குடியரசு தலைவர் திருமதி திரெளபதி முர்மு தமது செய்தியில் கூறியுள்ளார். கல்வி மூலம் சுயசார்பு பெற்ற தனி மனிதர்கள் தான், சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் அர்த்தமுள்ள பங்களிப்பு செய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எளிமை, கருணை மற்றும் மனிதகுல சேவையின் வடிவமாகவே

போற்றப்படுபவர் சிவகுமார மகா சுவாமிகள் என்றும், கல்வி, சமூக சேவை மற்றும் ஆன்மிக சேவையில் சுவாமிகள் ஆற்றிய பங்களிப்பு எப்போதும் நிலைத்து நிற்கும் என்றும் கூறியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உள்ளிட்டவர்களும் சிவகுமார மகா சுவாமிகளுக்குப் புகழாரம் சூட்டியுள்ளனர்.

*ஒடிசா வாழ்த்து (16 )*

இன்று ஒடிசா உதய நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். வளமான கலாச்சார மரபுகளுக்கும், மக்களின் நெகிழ்வுத் தன்மைக்கும், புகழ்பெற்ற மாநிலமான ஒடிசா, நாட்டின் விடுதலைக்கு முக்கியப் பங்களித்தது போலவே, முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் பணிகளிலும் முக்கியப் பங்களித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். ஒடிசா மாநிலத்தின் மகத்தாக கலாச்சார புகழையும், மாநில மக்களின் அயராத உழைப்பையும் கொண்டாடும் நாள் இது என்று குடியரசு துணைத்

தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். சிறப்பான கலாச்சாரம் மற்றும் மகத்தான ஆன்மிகத்தின் சின்னமாகத் திகழும் ஒடிசா மாநிலத்தின் மக்கள், எளிமைக்கும் மன உறுதிக்கும் பெயர் பெற்றவர்கள் என்றும், வரவிருக்கும் காலங்களிலும், வளர்ச்சியின் புதிய சிகரங்களை ஒடிசா எட்டத் தாம் வாழ்த்துவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

*ஹர்தீப் சிங் (12 )*

அஸ்ஸாமிலுள்ள நுமாலிகார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், 2025-26ஆம் நிதியாண்டில் 3 ஆயிரத்து 113 டன்னுக்கு மேற்பட்ட அளவில் கச்சா எண்ணெயை சுத்திகரித்து இருப்பதை மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி பாராட்டியுள்ளார். இந்த ஆலையின் மொத்த திறனுடன் ஒப்பிடுகையில் 103 சதவிகிதம் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். ஆலையின் எல்பிஜி உற்பத்தி கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 22 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், நாட்டிற்குத் தேவையான நேரத்தில் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஆலைக்குள்ள திறனுக்கு இதுவே சான்றாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வடகிழக்குப் பிராந்தியத்தை இந்திய எரிசக்தி பாதுகாப்பின் எஞ்சினாக மாற்றுவதில் நுமாலிகார் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் பங்கு மிக முக்கியமானது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அஸ்ஸாமில் இரண்டு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல், 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி அதிகரித்துள்ளது.

புதிய வருமான வரி சட்டம், மற்றும் இதர நிதி சீர்திருத்தங்கள் இன்று முதல், நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளன.

**தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அஸ்ஸாம்** மாநில சட்டமன்ற தேர்தலுக்கான மத்திய பார்வையாளர்களின் செயல்பாடுகள் குறித்து, தேர்தல் ஆணையம் மறு ஆய்வுக்கூட்டம் நடத்தியுள்ளது.